யானால் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஆணுக்கென்றும் பெண்ணுக்கென்றும் தனிப்பட்ட முறையிலே நிர்ணயிக்கப்படவில்லை. அனைவருக்கும் ஒருமனதாகத்தான் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்கள் நிரந்தரம்.

*5590. திரு. இளம் வழுதி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 480 நாட்கள் தொடர்ந்து பணிபுரியும் அரசுத் துறை தொழிலாளர்களை உடனே நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

24 காலண்டர் மாதங்களில் 480 நாட்கள் தொடர்ந்து பணி புரியும் தொழிலாளரை நிரந்தரம் செய்ய 1981-ம் ஆண்டு தமிழ் நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளரை நிரந்தரப்படுத்து தல்) சட்டம் வகை செய்கிறது. இச்சட்டம் மாநில அரசின் அனைத்துத்துறை தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இச் சட்டத்தை முனைப்புடன் செயல்படுத்துமாறு தொழிலாளர் ஆணையர் தனது சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கி யுள்ளார். தொழிலாளர்களிடமிருந்து அவர்களாகவே விண்ணப் பங்களைப் பெற்று, சரிபார்த்து நிரந்தரமாக நிர்வாகத்தினருக்கு ஆணையிடவும், சட்ட விதிகளின்கீழ் நிர்வாகத்தினரிடமிருந்து விவரங்கள் பெற்று சட்டப்பிரிவுகள் மற்றும் விதிகளை மீறு வோருக்குத் தண்டனை வழங்கவும் கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளனர்.

தொழிற்சாலை ஆய்வகத்துறை, இச்சட்டத்தை தொழிற் சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகளில் அமுல் படுத்தப்படுகிறது. தொழிலாளர்கள், சட்டப்படி நிரந்தமாக் கப்பட்டுள்ளனராவென தொழிற்சாலை ஆய்வாளர்கள்

1990 மே 11]

ஆய்வு செய்யும்போது சரிபார்க்கின்றனர். சட்டப்படி நிரந்தரம் செய்யாத நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுத்து தொழிலாளர் களை நிரந்தரம் செய்வதற்கு நடவடிக்கை தொடரப்படுகிறது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 480 நாட்கள் தொடர்ந்து பணிபுரியும் தொழிலாளர் களை நிரந்தரப் செய்ய 1981ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் சட்டம் வகை செய்கிறது என்று இந்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் இச்சட்டத் தின்படி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்களா என்று தொழிற் சாலை ஆய்வாளர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் உண்மை நிலை என்னவென்றால் நாம் தடுக்கிலே புகுந்தால் கோலத்திலே புகுந்துவிடுகின்ற சாமர்த்தியமான அதிகாரிகள், தொடர்ந்து வேலை செய்தால்தானே வேலையை நிரந்தரம் செய்ய வேண்டு மென்று சட்டமிருக்கிறது. எனவே அவ்வப்போது 'பிரேக்' கொடுத்துவிடுவோம் என்று தொழிலாளர்களுக்கு 'பிரேக்' கொடுத்துவிடுகிறார்கள். எனவே இந்த நிலையை மாற்றுகின்ற வகையிலே, 'பிரேக்' கொடுத்தாலும், 'பிரேக்' கொடுக்கப்படா விட்டாலும் 480 நாட்கள் தொடர்ந்து வேலை செய்தால், 480 நாட்கள் தொடர்ந்து வேலை செய்திருந்தால் அவர்களை நிரந் தரம செய்ய அரசு ஆணை பிறக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப் படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இப்பொழுது நடைபெற்ற கூட்டங்களிலெல்லாம் ஒரு பெரிய ஆய்வு செய்து இன்றைக்கு அரசின் சார்பாக ஒரு சட்டமே இயற்ற இருக்கிறார்கள். அப்படி ஒரு சட்டம் இயற்றப்படுமேயானால் நிச்சயமாக அத்தனை தொழி லாளர்களையும் நிரந்தரப்படுத்த முடியுமே தவிர மற்ற இடங் களில் 480 நாட்கள் தொடர்ந்தால் போல் வேலை செய்தவர் களை...... இந்த அரசின் சார்பாக இன்றைக்குக் கூட உதாரணமாகக் கூட சொல்லலாம்—பால் பண்ணையிலே ஈரோட்டில் இருக்கின்றவர்களை, ஒரு 100 பேர்களை இன்றைக்கு நிரந்தரப்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி யிருக்கிறது. இப்படி ஒரு சில இடங்களில்தான் செய்ய முடியுமே தவிர அனைத்து இடங்களிலும் செய்யப்படவேண்டுமானால் இதற்கென தனியாக ஒரு சட்டத்தைஇயற்ற வேண்டும்.

10.00 மணி

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 120 நாட்கள் வேலை செய்து இருந்தால், மத்திய அரசாங்கம் நிரந்தரம் செய்கிற சட்டத்தைக் கொண்டுவந்து இருக்கிறது. எனவே இதைக் கருத்திலே கொண்டு.....

டி 2—53-141—5

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் வினா நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. இளம்வழுதி : கேள்வியை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 120 நாட்கள் மட்டும் வேலை செய்தால் என்று இல்லை. ஒப்பந்தத் தொழிலாளர்களை வைத்துக் கொள்ளக் கூடாது; ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப் படுத்தவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆனால், அதில் வேலை செய்கின்ற ஒப்பந்தத் தொழிலாளியையே நிரந்தரப் படுத்தவேண்டும் என்று சட்டம் இல்லை. அதனால் தான் இதை நல்ல முறையிலே நிலைப்படுத்த முடியவில்லை. அதற்காக மத்திய அரசு இப்போது புதிய சட்டம் ஒன்றை இயற்ற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயமுத்தூர் மெட்ரோபாலிட்டன் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி.

* 2599—திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயமுத்தூர் மெட்ரோபாலிடன் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி என்ற ஓர் அமைப்பை உருவாக்கிட அரசு ஆய்வு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் மின்சார வேகத்தில் வளர்ந்து வரும் தொழில் நகரான கோவை மாநகரத்தில் மெட்ரோபாலிட்டன் டெவலப்மென்ட் அத்தாரிட்டி என்ற அமைப்பு உருவானால் தான் நகரத்தினுடைய வளர்ச்சி, நகரத்தினுடைய பல்வேறு திட்டங்கள் செழிப்படையும் என்பதை அரசு அறிந்து இனியாவது அப்படி ஒரு அமைப்பை உருவாக்குவதற்கு அரசு, முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS